## தென்னை வேர் வாடல் நோய் மேலாண்மை




முனைவர் ப. லதா

முனைவர் சி. சுதாலக்ஷ்மி

முனைவர் இரா. அருள்பிரகாஷ்

முனைவர் ப. மீனா

முனைவர் ந. தவப்பிரகாஷ்

முனைவர் ஜே. சுரேஷ்

தென்னை ஆராய்ச்சி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

ஆழியார்நகர்


### அறிமுகம்

தென்னை மரம் (*கோகஸ் நுசிஃபெரா*) என்பது பூலோக கற்பகவிருட்சம் அல்லது மரங்களின் சொர்க்கம் அல்லது வாழ்க்கை மரம் என்றும் பல பெயர்களில் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இது அரிகேசியே குடும்பத்தைச் சேர்ந்த மரமாகும். தென்னையிலிருந்து பெறப்படும் பல்வேறு பொருட்களிலிருந்து பல நன்மைகள் கிடைக்கின்றன.. இத்தகைய தென்னையை கேரளா வேர் வாடல் நோய் தாக்கி வருகின்றது. இது கேரளா மாநிலம், கோட்டயம் மாவட்டத்தில் 1882ல் தோன்றியது. தற்போது, தமிழ்நாட்டில் கேரளாவை ஒட்டியுள்ள மாவட்டங்களான தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூரில் வேகமாக பரவி வருகின்றது. இந்நோயால் மரங்கள் மடியாவிட்டாலும் மரங்கள் மெதுவாக சோர்வடைவதால், காய்களின் எண்ணிக்கையும் மற்றும் தரமும் குறைந்து வருகின்றது. இந்நோயானது அனைத்து வயது மரங்கள், மண், வீரிய ஒட்டு மற்றும் நாட்டு இரகங்களிலும் காணப்படுகிறது. இந்நோய் இளம் மரங்களில் ஏற்பட்டால் பூக்கும் தருணம் தள்ளிப்போவதுடன் மட்டுமல்லாமல் இலைஅழுகல் நோயால் பாதிக்கப்பட்டு காய்களின் எண்ணிக்கையும் குறைந்து காணப்படும். மேலும் இந்நோய் ஆரம்ப நிலையில் 35 சதவீதமும் முற்றிய நிலையில் 85 சதவீத மகசூல் இழப்பும் ஏற்படுத்துகிறது.

### வேர் வாடல் நோயின் அறிகுறிகள்

கேரளா வேர் வாடல் நோயின் அறிகுறிகள் ஆரம்ப நிலையில் கண்டறிவது மிகவும் கடினம். எவ்விதகாரணமும் இன்றி அதிகமாக குரும்பை உதிர்தல் இதன் முதல்அறிகுறி ஆகும். பின்பு தென்னை மரத்தில் உள்ள மட்டைகளின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி இலைமடல்களின் ஓரங்கள் கருகி கீழ்நோக்கி வளைந்து காணப்படும். இது மனிதனின் விலாஎலும்பு போல காட்சியளிக்கும். இலைமடல்களின் கருகிய பகுதிகள் அதிகமான காற்று அல்லது மழையின் போது மரத்திலிருந்து உதிர்ந்து விடுவதால் குச்சிகள் மட்டும் நீட்டிக்கொண்டிருக்கும். இந்த இரண்டு அறிகுறிகளும் நோய் முற்றிய நிலையில் உள்ள மரங்களில் அதிகமாகக் காணப்படும். இந்நோயானது இளங்குருத்து பகுதியை தாக்கி குருத்துப் பகுதியை அழுக செய்யும். மேலும் குருத்து இலைகளிலும் இலைஅழுகல் அறிகுறிகள் தென்படும். இதனால் பாதிக்கப்பட்ட இலைகளில் வெறும் குச்சிகள் மட்டும் காணப்படும். மேலும் பூங்கொத்து கருகுதல் மற்றும் வேர் அழுகுதல் ஆகியவை இவற்றின் முக்கிய அறிகுறிகளாகும்.

### பரவும் விதம்

கேரளா வேர் வாடல் நோய் *கேன்டிடேட்ஸ் பைட்டோபிளாஸ்மா* என்னும் நுண்ணுயிரி மூலம் உண்டாகிறது. இது கண்ணாடி இறக்கை மற்றும் தத்துப்பூச்சி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகள் மூலம் பரவுகின்றது.

**வேர் வாடல் நோயைப் பரப்பும் பூச்சிகள்**




**கண்ணாடி இறக்கைப்பூச்சி தத்துப்பூச்சி**

### ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள்

- இந்நோய் பிற மரங்களுக்கு பரவுதலை தவிர்க்கும் வகையில் வருடத்திற்கு 10 காய்களுக்கும் குறைவாக அல்லது காய்கள் இல்லாமல் மிக அதிகளவு நோயுற்ற மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.
- நன்றாக வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயிர், சணப்பை, கலப்பகோணியம், பியூரேரியா மற்றும் தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி

அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.

- தென்னையின் வயதுக்கேற்ப ஊடுபயிர்களான வாழை, மிளகு, கோகோ, மஞ்சள், இஞ்சி, கிழங்கு வகைகள், அன்னாசி, காபி, ஜாதிக்காய் மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களை பயிரிட்டு வருமானத்தை பெருக்கலாம் .
- உர மேலாண்மையில் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளான தொழு உரம் - 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு - 5 கிலோ, யூரியா - 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் - 2 கிலோ, பொட்டாஷ் - 3.5 கிலோ, *டிரைக்கோடெர்மா விரிடி* + *பேசில்லஸ் சப்டிலிஸ்* - 200 கிராம் வேர்உட்பூசணம் - 50 கிராம் ஆகியவற்றை வருடத்திற்கு இரு முறை பிரித்து ஒரு மரத்திற்கு இட வேண்டும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக் 40 மில்லியை 160 மில்லி தண்ணீருடன் கலந்து ஆண்டிற்கு இரு முறை வேரில் கட்ட வேண்டும்.
- டைமீதோயேட் 1.5 மிலி/லிட்டர் மருந்தை 1 மிலி ஒட்டுத்திரவம் கலந்து ஒரு மாத இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோகோகான் தாய் நுண்ணுயிரி கலவையிலிருந்து பெருக்கம் செய்யப்பட்ட நுண்ணுயிரிக்கலவை 2 லிட்டர் எடுத்து 8 லிட்டர் தண்ணீருடன் கலந்து வேர்ப்பகுதி நன்கு நனையுமாறு ஊற்ற வேண்டும். இம்முறையை இரண்டு மாத இடைவெளியில் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.
- இலை அழுகல் அறிகுறிகளைக் கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு ஹெக்சகோனசோல் 2 மில்லி + 300 தண்ணீருடன் என்ற அளிவில் குருத்துப் பகுதியில் 45 நாள் இடைவெளியில் ஊற்ற வேண்டும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோகோகான் நுண்ணுயிரி பெருக்குதல்**

**தேவையான பொருட்கள்**

1. கோகோகான் - 5 லிட்டர்
2. கரும்புச்சர்க்கரை – 10 கிலோ
3. தயிர் - 5 லிட்டர்
4. தண்ணீர் - 150 லிட்டர்
5. உப்பு (சோடியம் குளோரைடு) - 500 கிராம்.

**செய்முறை**

- 150 லிட்டர் தண்ணீரில் 10 கிலோ கரும்பு சர்க்கரை மற்றும் 5 லிட்டர் தயிர் மற்றும் சோடியம் குளோரைடு உப்பு 500 கிராம் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.
- பின்னர் 5 லிட்டர் கோகோகான் தாய்க்கலவையை சேர்த்து மூங்கில் குச்சி கொண்டு 10 நிமிடம் நன்கு கலக்க வேண்டும்.
- பின்பு நிழல்பாங்கான இடத்தில் சாக்கு வைத்து மூட வேண்டும்.
- 5 முதல் 7 நாட்கள் தொடர்ந்து மூன்று வேளையும் பத்து நிமிடம் மூங்கில் குச்சி கொண்டு கலக்க வேண்டும்.
- இவ்வாறு இனப்பெருக்கமான கலவையை 2 லிட்டர் + 8 லிட்டர் தண்ணீருடன் கலந்து வேர் பகுதி நன்கு நனையுமாறு ஊற்ற வேண்டும்.
- இம்முறையை இரண்டு மாத இடைவெளியில் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

**கோகோகான் கிடைக்குமிடம்**

பயிர்நோயியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641003
தொலைபேசி - 0422-6611226

**வேர் வாடல் நோயின் அறிகுறிகள்**



**இலைகள் மஞ்சள் நிறமாதல்**



**இலைகள் உள்நோக்கி வளைதல்**



**இலையின் ஓரங்கள் கருகி காணப்படுதல்**



**இலை அழுகல்**



தென்னை ஆராய்ச்சி நிலையம்
ஆழியார்நகர்-642101
தொலைபேசி: 04253-288722